என்று சொல்லியிருக்கிறார்கள். 1978-ல் இப்படிச் சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பிறகுதான் இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. முதலிலே சொல்லியதுபோல, இந்த முடிவை மாற்றுவதற்கான காரணங்கள் இருந்தால், மீண்டும் அதை ஆராயலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மூன்றாவது ஊதியக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையிலே இந்தப் படி நிறுத்தப்பட்டிருந்தாலும், பொதுவாக ஒவ்வொரு அரசும் அதன் ஊழியர்களுக்கும் பொதுமக்களுக்கும் புதிது புதிதாகச் சலுகைகளை வழங்கிக் கொண்டிருக்கின்ற நேரத்தில், ஏற்கெனவே இருக்கின்ற சலுகைகளை எடுக்கின்ற வகையிலே இந்த ஆணை இருக்கிறது. இன்னும் அங்குள்ள ஆசிரியர்களுக்கு அந்த நிலைமைகள் இருந்துகொண்டிருக்கின்றன என்பதால், மறுபடியும் இந்த ஆணையை ஆசிரியர்களுக்குச் சாதகமாகப் பிறப்பிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல, இந்தமாதிரியான சங்கடங்களும், துயரங்களும் அளிக்கின்ற நிலைமைகள் அங்கு இருந்தால், அரசு அதைப்பற்றி ஆராய்ந்து முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. மேலவை விதி 82-ன்கீழ் அமைச்சரின் விளக்க உரை.

உயர் அழுத்தத் தொழிற்சாலைகளுக்கான மின் வினியோகத்தில் கட்டுப்பாடுகள் குறித்து

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கடந்த சில நாட்களாக மின் விநியோகத்தில் பல்வேறு இடங்களில் தடை ஏற்பட்டுள்ளது எனவும், ஒரே சீரான முறையில் மின் விநியோகம் இல்லாததினால் விவசாய மின் இணைப்புகளில் உள்ள பம்பு செட்டுகள் பாதிக்கப்பட்டன எனவும், பல்வேறு பகுதி விவசாயச் சங்கப் பிரதிநிதிகளிடமிருந்தும், சட்டப்பேரவை, மேலவை உறுப்பினர்களிடமிருந்தும் முறையீடுகள் வந்துள்ளன.

1981 மார்ச் 9] [திரு. கா. இராசா முகமது]

மின்சக்தி ஒரு நாளைக்கு சுமார் 31 மில்லியன் யூனிட்டுகள் தேவைப் படுகின்றன. அனல் மின்நிலையங்களில் இருந்தும், நீர் மின் நிலையங் களிலிருந்தும், கேரள அரசிடமிருந்தும் நமக்கு மொத்தமாக 26.65 மில்லியன் யூனிட்டுகள் தான் கிடைக்கின்றன. எனவே பற்றாக்குறை நாளொன்றுக்கு சுமார் 4.35 மில்லியன் யூனிட்டுகள் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே சீரான மின் விநியோகம் கிராமப்புறங்களுக்கும் விவசாய மின் இணைப்புகளுக்கும் கிடைக்கவேண்டும் என்பதற்காக உயர் அழுத்தத் தொழிற் சாலைகளுக்கான மின் விநியோகத்தில் கீழ்க்காணும் கட்டுப்பாடுகளை விதிக்க அரசு முடிவெடுத்துள்ளது.

1. சிமிண்ட் உற்பத்தி ஆலைகளுக்கு உச்சத் தேவையிலும் மின் சக்தியிலும் 15 சதவிகித மின்வெட்டு அமுலாக்கப்படும்.

2. அத்தியாவசியமான பணிகளுக்கும் உச்சத் தேவையிலும், மின் சக்தியிலும் 15 சதவிகித வெட்டு அமுல்படுத்தப்படும். மாவு மில்களுக்கு விலக்களிக்கப்படுகின்றன.

3. பொதுப்பணிகளுக்கான உயர் அழுத்த மின் இணைப்புகளுக்கும், உச்சத் தேவையிலும் மின் சக்தியிலும் 30 சதவிகித மின்வெட்டு அமுல்படுத்தப் படும்.

4. மூன்று சிப்டுகள் வேலை செய்யும் உயர் அழுத்தத் தொடரா முறைத் தொழிற்சாலைகளுக்கு உச்சத் தேவையில் 50 சதவிகிதம் மின் வெட்டு அமுல் படுத்தப்படும். பயன்படுத்தும் மின் சக்தியில் தற்போது நடைமுறையில் உள்ள 30 சதவிகித வெட்டில் எவ்வித மாற்றமும் இல்லை.

5. அரசு ஆணைகளின் மூலம் அவ்வப்போது விலக்கு அளிக்கப்பட் டுள்ள தொழிற்சாலைகளுக்கும் உச்சத் தேவையிலும் மின் சக்தியிலும் 15 சத விகித மின்வெட்டு அமுல் படுத்தப்படும். அரிசி ஆலைகள் உபரி உற்பத்தியை அரசுக்குத் தருமானால் இதிலிருந்து விலக்களிக்க அரசு முன்வரும்.

6. புதிய உயர் அழுத்த மின் இணைப்புகளோ ஏற்கெனவே உள்ள தொழிற்சாலைகளுக்குக் கூடுதல் சுமையோ நிலைமைகள் சீர்படும்வரை வழங்கப்படமாட்டாது.

7. அலங்கார விளக்குகளோ, ஆடம்பர விளக்குகளோ, பெயர்ப் பலகை களில் விளக்குகளோ பயன்படுத்துவதற்குத் தடை விதிக்கப்படும்.

மேற்குறிப்பிட்டுள்ள நடவடிக்கைகளினால் மின்சக்தியின் உபயோகம் ஓரள விற்குக் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்குறிப்பிட்டுள்ள கட்டுப்பாடுகளை அமுல்படுத்துவதன்மூலம் குறையக் கூடிய மின் சக்தியைக் கொண்டும், மற்ற நடவடிக்கைகளின் மூலமும் கிராமப் புறங்களில் கீழ்க்காணும் வகையில் சீரான மின் விநியோகத்திற்கான ஏற்பாடுகள் அமுலாக்கப்படும்.

முதல் பிரிவு : காலை 6 மணி முதல் நண்பகல் 12 மணி வரை (6 மணி நேரம்).

இரண்டாவது பிரிவு : நண்பகல் 12 மணி முதல் மாலை 6 மணி வரை (6 மணி நேரம்).

மூன்றாவது பிரிவு : இரவு 10 மணி முதல் காலை 6 மணி வரை (8 மணி நேரம்).

இம்மூன்று பிரிவுகளுக்கும் 10 நாட்களுக்கு ஒரு முறை சுழல் முறையில் மாற்றி மாற்றி மின்சக்தி வழங்கப்படும்.

இந்த கட்டுப்பாடுகள் 9—3—1981-ம் நாளிலிருந்து அமுலுக்கு வரும்.

6. அரசின் சட்ட முன்வடிவுகள்.

(1) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வீட்டுவசதி வாரிய (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1981).

* மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

“ சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1981 ஆம் ஆண்டு, வீட்டுவசதி வாரிய (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1981) @ ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப் பட வேண்டும் ”

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

“ சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1981 ஆம் ஆண்டு வீட்டுவசதி வாரிய (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1981) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.”

@ 486 ஆம் பக்கத்தில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.